
# பொருளடக்கம்




நாற்பதினாயிரம் ரூபாய்
பக்க எண்: 5


இரகசியம்
பக்க எண்: 80







மர்ம மனிதன்
பக்க எண்: 239



# நாற்பதினாயிரம் ரூபாய்

அப்பொழுதுதான் இருளின் தன்மை மெல்ல குறைந்து கொண்டிருந்தது. இனிமேல் தான் விடியும்.

சங்கர்லால், படுக்கை அறையைவிட்டு வெளியே வந்து அந்த அறைக் கதவைப் பூட்டிச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு மாடியின் வெளிப்பகுதிக்கு வந்து நின்று வானத்தைப் பார்த்தார். எங்கும் இருள்.

மெல்ல வாடைக் காற்று வீசியது. இதமாய் இருந்தது. குளிர் தாங்காமல் திறந்து கிடக்கும் தன் நெஞ்சை மூடிக் கொண்டு, திரும்பிக் கீழே பங்களாவைப் பார்த்தார் சங்கர்லால். அங்கே கீழே...

இரண்டு கான்ஸ்டபிள்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் விரைப்பாக நின்று கொண்டிருந்தார்கள். அந்தத் துப்பாக்கிகளின் நுனிகளில் செருகப்பட்டிருக்கும் கத்திகள், அந்தி மங்கிய இருளிலும் பளபளத்தன.

அவர்கள் இருவருக்கும் இடையில் நடு வாயிற்படியில் கால்களைப் பரப்பி உட்கார்ந்து கொண்டிருந்த மாது, வெற்றிலை குதப்பிக் கொண்டிருந்த வாய்க்குள் புகையிலைத் துண்டு ஒன்றை உள்ளே தள்ளிச் சுவையோடு மென்று கொண்டிருந்தான்.

சங்கர்லால் மெல்லச் சிரித்துக்கொண்டே தன் பார்வையை வாயில் பக்கம் திருப்பினார். அங்கே அவருடைய அருமையான நாய்கள் மூன்றும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன!

சங்கர்லால் திரும்பி, தன் அறையைத் திறந்து விளக்கைப் போட்டுவிட்டுச் சுவரில் இருக்கும் மின்சார மணியை அழுத்திவிட்டு, நாற்காலியில் வந்து உட்கார்ந்து கால்கள் இரண்டையும் மேசையின் மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு பக்கத்தில் இருந்த புத்தகத்தை எடுத்து, நேற்று விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினார். இதுதான் சங்கர்லாலுக்குப் பிடித்த பொழுதுபோக்கு! குளிக்கும் நேரம், தூங்கும் நேரம் தவிர, வீட்டிலிருக்கும்போது எல்லாம் சங்கர்லாலை இந்த நிலையில்தான் பார்க்கலாம். இந்தப் பழக்கம் அவரிடத்தில் பல ஆண்டுகளாக இருக்கிறது.

ஒரு பக்கத்தைப் படித்து முடித்துவிட்டு அடுத்த பக்கத்தைத் தள்ளும்போது, ''என்ன தம்பி?'' என்று கேட்டுக்கொண்டே போது மாது வந்து நின்றான்.

சங்கர்லால், பார்வையைப் புத்தகத்திலிருந்து எடுத்து, "என்ன மாது, இன்றைக்கு இவ்வளவு விரைவில் எழுந்து விட்டாயே?" என்று கேட்டார்.

''இரவு முழுவதும் தூக்கமே இல்லை தம்பி.''

''ஏன்?''

''ஏனோ?''

''சரி, தேநீர் கொண்டு வா.''

''சரி தம்பி'' என்று சொல்லிவிட்டு மாது கீழே இறங்கிப் போனான்.

சங்கர்லால், விட்ட இடத்திலிருந்து படிக்க தொடங்கினார். அப்போது...

எதிரே வந்து நின்றவன், கீழே நின்று காவல் காக்கும் கான்ஸ்டபிள்களில் ஒருவனான பொன்னன்.

''என்ன பொன்னா?'' என்று கேட்டார் சங்கர்லால்.

பொன்னன் உள்ளே வந்து, தன் கையில் இருந்த அச்சடித்த அட்டை ஒன்றைச் சங்கர்லாலிடம் கொடுத்து, ''இந்த மனிதர் உங்களைப் பார்க்க வேண்டுமாம் ஐயா. அனுப்ப அனுமதி உண்டா?'' என்றான்.

சங்கர்லால் அச்சடித்த அந்த அட்டையைப் பார்த்துவிட்டு, ''இந்த மனிதரை எனக்குத் தெரியாதே! இவர் யார்? எங்கிருந்து வருகிறார்?'' என்று கேட்டார்.

''நான் கூட இந்த மனிதரை இதுவரை பார்த்தது இல்லை ஐயா'' என்றான் பொன்னன்.

''இந்தப் புதிய மனிதர், விடிந்ததும் விடியாமலும் இருக்கும் இந்த நேரத்தில் என்னை வந்து பார்க்க வேண்டிய தேவை என்ன? சரி, நன்றாக விடிந்த பிறகு வரச் சொல்லு. உடனே என்னைப் பார்க்கவேண்டும் என்று சொன்னால், நன்றாகச் சோதனைப் போட்டு, அவரிடம் எக்கருவியும் இல்லை என்று தெரிந்த பிறகு அனுப்பு'' என்றார் சங்கர்லால்.

''சரி ஐயா'' என்று சல்யூட் அடித்துவிட்டுக் கீழே இறங்கிப் போனான் பொன்னன்.

பொன்னன் போனதும் மாது தேநீரோடு வந்தான்.

சங்கர்லால், தேநீரை வாங்கி ஒவ்வொரு வாயாகச் சுவைத்துக் குடித்துவிட்டுக் கோப்பையை மாதுவிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது -

வளர்ந்த, தலை நரைத்த, முகம் சுருங்கிச் சதை மடிப்புகள் விழுந்த ஒரு மனிதர். சங்கர்லாலைப் பார்த்து இரு கரங்களையும் கூப்பிக் கொண்டே வந்தார்.

பின்னாலேயே நீட்டிய துப்பாக்கியுடன் பொன்னன் அந்த மனிதரைக் கவனித்தபடியே காவலாக வந்தான்.

சங்கர்லால் எழுந்து நின்று வணங்கினார். வந்தவர் நாற்காலியில் உட்கார்ந்ததும், சங்கர்லாலும் தன் இடத்தில் அடக்கமாக உட்கார்ந்தார்.

மாது வெளியே போனான்.

மாது போனதும் சங்கர்லால் பொன்னனைப் பார்த்து, ''பொன்னா, நீ ஏன் நிற்கிறாய்? கீழே போ'' என்றார்.

பொன்னன் ஒரு சல்யூட் அடித்துவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டான்.

''நீங்கள் யார்? நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று சங்கர்லால் பேச்சைத் தொடங்கினார்.

''ஒரு பெரிய அலுவலாகவே நான் உங்களிடம் வந்து இருக்கிறேன்.''

''என்ன சொல்லுங்கள்?''

''என் பையனைக் காணவில்லை. நீங்கள்தான் அவனைக் கண்டுபிடித்துத் தரவேண்டும்'' என்று சொல்லிவிட்டுத் தன் கண்களில் வந்து நிற்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் அந்த மனிதர்.

''துன்பம் கொள்ளாதீர்கள். பாசம், உயிர்க் கொல்லி. உயிர் போகும் வரை அது நம்மை விடுவதில்லை. உங்கள் பையனை நான் கண்டுபிடித்துத் தருகிறேன். ஆறுதல் பெறுங்கள். இப்போது ஏதாவது சாப்பிடுகிறீர்களா?'' என்று அன்போடு கேட்டார் சங்கர்லால்.

''இல்லை, ஒன்றும் வேண்டாம். இப்பொழுதுதான் காப்பி அருந்திவிட்டு வந்தேன். போய்க் குளித்துவிட்டுச் சாப்பிட வேண்டும்'' என்றார் துன்பத்தில் தோய்ந்துவிட்ட அந்த மனிதர்.

''சரி, உங்கள் பையன் எப்பொழுது காணாமல் போனான்?'' என்று விவரத்தை அக்கறையுடன் கேட்கத் தொடங்கினார் சங்கர்லால்.

''மூன்று திங்களுக்கு மேல் ஆகிவிட்டன!'' என்று சொல்லிவிட்டுக் கேவினார் அந்த மனிதர்.

''மூன்று திங்களுக்கு மேல் ஆகிவிட்டனவா?'' என்று மிக வியப்போடு கேட்டார் சங்கர்லால்.

''ஆமாம்'' என்றார் அந்த மனிதர் - இன்னும் சற்று அழுது கொண்டு.

''அப்படியானால், இவ்வளவு நாட்கள் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டார் சங்கர்லால்.

''வந்துவிடுவான் வந்துவிடுவான் என்றிருந்தேன்'' என்றார் அந்த மனிதர்.

இதைச் சொன்னதும் அவர் அழுகை அடக்கமுடியாத அளவுக்குப் போய்விட்டது!

''கண்ணீரைக் கட்டுப்படுத்துங்கள். உங்கள் பையன் கிடைத்துவிடுவான்'' என்றார் சங்கர்லால்.

''கிடைத்து விடுவானா?'' என்று வியப்போடு மகிழ்வு பொங்கக் கேட்டார் அந்த மனிதர்.

''கண்டிப்பாய்க் கிடைத்துவிடுவான்! ஆனால்....'' என்று இழுத்தார் சங்கர்லால்.

''ஆனால் என்ன?'' என்று பதறினார் அந்த மனிதர்.

அவர் முகத்தில் அச்சமும் இருளும் சூழ்ந்து, அவர் முகத்தைச் சுருக்கின.

''நான் கேட்கிற வினாக்கெல்லாம் உண்மையான விடையைச் சொல்லவேண்டும் நீங்கள்'' என்றார்.

''கேளுங்கள் சங்கர்லால்; கேளுங்கள். நீங்கள் எத்தனை வினாக்கள் கேட்டாலும் அத்தனை வினாக்களுக்கும் நான் உண்மையான விடைகளைச் சொல்லுகிறேன். என் பையன் எனக்குக் கிடைத்துவிட்டால் போதும்'' என்று சொல்லிவிட்டுத் தன் கண்கள் இரண்டையும் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார் அந்த மனிதர்.

சங்கர்லால் திரும்பி சுவரில் இருந்த மின்சார மணியை அழுத்திவிட்டு,மேசையில் கவிழ்த்து வைத்திருந்த அந்தப் புத்தகத்தை மூடிவைத்தார்.

கொஞ்ச நேரத்தில் மாது, ''என்ன தம்பி?'' என்று கேட்டுக் கொண்டு வந்து நின்றான்.

''சூடாக இரண்டு தேநீர் கொண்டு வா'' என்றார் சங்கர்லால் அன்போடு.

கொஞ்ச நேரத்தில் மாது இரண்டு கோப்பைத் தேநீர் கொண்டுவந்து மேசையின் மேல் வைத்தார்.

சங்கர்லால் அந்த மனிதனிடம், ''பருகுங்கள்'' என்றார்.

அதுவரையில் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு இருந்த அந்த மனிதர், நிமிரிந்து எதிரே இருந்த தேநீரை எடுத்துக் குடித்துவிட்டுக் காலிக்கேப்பையை மேஜையின் மீது வைத்தார். சங்கர்லாலும் தேநீரைக் குடித்துவிட்டுக் காலிக் கோப்பையை மேசையின் மேல் வைத்தார்.

மாது, தேநீர்க் கோப்பைகளை எடுத்துக்கொண்டு கீழே போனான்.

மாது, சென்றதும், ''சரி, நான் கேட்கிற வினாக்களுக் கெல்லாம் உண்மையான பதிலைச் சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டார் சங்கர்லால்.

''ஆகட்டும் செல்லுகிறேன்.''

''உண்மையான பதிலைச் சொல்லவேண்டும்.''

''ஆகட்டும். எதையும் மறைக்காமல் உண்மையான பதிலைச் சொல்லுகிறேன்.''

சங்கர்லால், வினாக்களைக் கேட்கத் தொடங்கினார். அந்த மனிதர், சங்கர்லாலின் வினாக்களுக்கெல்லாம் பதில் செல்லத் தொடங்கினார்.

''உங்கள் பெயர் என்ன?''

''நாகநாதன்.''

''வேறு பெயர் ஏதாவது உண்டா?''

''கிடையாது.''

''இப்பொழுது உங்களுக்கு என்ன வயது?''

''ஐம்பத்தேழு.''

''நீங்கள் இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?''

''சும்மாதான் இருக்கிறேன்.''

''நீங்கள் பணக்காரரா?''

''ஆமாம்.''

''பரம்பரை பணக்காரரா?''

''இல்லை.''

''இப்பொழுது இருக்கும் சொத்துக்கள், நகைகள், பணம் காசுகளெல்லாம் நீங்கள் திரட்டியவைதாமா?''

''ஆமாம்.''

''உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள்?''

''ஒரே பையன்தான்!''

''இப்பொழுது காணாமல் போய்விட்டானே? அந்தப் பையன் தானே?''

''ஆமாம்.''

''அவன் அம்மா வீட்டில் இருக்கிறார்களா?''

''இல்லை.''

''எங்கே?''

''இறந்துவிட்டாள்!''

''அவள் இறந்து எவ்வளவு நாள்களாகின்றன?''

''பல ஆண்டுகள் ஆகின்றன!''

''அவன் அம்மா இல்லாததனால் அவன் மேல் நீங்கள் அவ்வளவு அன்பாய் இருக்கிறீர்கள் போல் இருக்கிறது!''

''ஆமாம். அவன் ஒருவன்தானே எனக்கு! எனக்காக இந்த உலகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?

''அவனும் என்னைத் தனியாக அலைய விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டான்!''

''வருந்தாதீர்கள். நான் தான் உங்களுக்குப் பையனைக் கண்டுபிடித்துத் தருகிறேன் என்று சொல்லி விட்டேனே. அதற்குப் பிறகும் எதற்காக வருத்தப்படுகிறீர்கள்? சரி, அவன் காணாமற் போனதற்குக் காரணம் என்ன? நீங்கள் அவனை அடித்தீர்களா?''

''நான் அவனை இதுவரை கடுமையாகப் பேசியது கூடக் கிடையாது. கடுஞ்சொல் சொல்வதற்கு அஞ்சிய நான் அன்பான என் செல்வத்தை அடிப்பேனா?''

''பின் ஏன் அவன் ஓடிப்போனான்?''

''அவனுக்குச் சற்று மூளைக் கோளாறு உண்டு. அவன் அம்மா இறந்ததிலிருந்தே அவன் மனமும் மூளையும் சரியில்லை. சில வேளைகளில் மூளைக் குழம்பியவன் போல வெறிகொண்டவன் மாதிரி வீடெங்கும் அலைவான்.''

''ஓகோ, அடிக்கடி அவனுக்கு அந்த மாதிரி வெறி பிடிக்குமோ?''

''அவன் தன் நினைவோடு இருப்பது எப்பொழுதாவது தான்!''

''ஓகோ, அவன் காணாமல் போனது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இரவில் எப்பொழுதும் எனக்கு அருகிலேதான் படுத்துக் கொள்ளுவான். ஒரு நாள் இரவு நான் ஏதோ ஓசை கேட்டு எழுந்து பார்த்தேன். அவன்தான் அந்த நள்ளிரவு நேரத்தில் ஏதாவது செய்கிறானோ என்று எழுந்து விளக்கைப் போட்டுப் பார்த்தேன். அவன் படுக்கை காலியாய் இருந்தது! தேடிப் பார்க்கத் தொடங்கினேன். அறை முழுவதும் தேடினேன். கட்டிலுக்கு அடியிலே பார்த்தேன். மேஜைக்குப் பின்னாலே பார்த்தேன். பீரோவிற்குப் பக்கத்திலே பார்த்தேன். அந்த அறை முழுவதும் அலசிப் பார்த்தேன். அந்த அறையில் எங்கும் அவன் இல்லை!

ஒருவேளை மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டு இருப்பானோ என்ற அச்சம் வந்து விட்டது எனக்கு! உடனே வெளியே ஓடிப்போய்க் கீழே பார்த்தேன். கீழே தரையில் அவன் பிணம் கிடந்தால் என்ன செய்வது என்று என் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது! நன்றாக எட்டிப் பார்த்தேன். தரையில் எதுவுமே இல்லை. வாயிலில் காவற்காரன் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. உடனே கீழே இறங்கிப் போய் எல்லாரையும் எழுப்பி, 'பையனைப் பாருங்கள்! பையனைக் காணோம்! பாருங்கள்!' என்று பதறினேன். எல்லாரும் விழித்தெழுந்து எல்லா விளக்குகளையும் போட்டுக் கொண்டு பங்களா முழுவதும் தேடினார்கள். பங்களாவில் எங்கேயும் பையனைக் காணவில்லை! பங்களாவில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தேடினோம். அவனைக் காணவே காணோம்! பிறகு தோட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்தோம். தோட்டத்திலும் அவன் இல்லை! பிறகு காரை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றினோம். விடியும்வரை சுற்றி அலைந்து பார்த்தோம், எங்கேயும் அவன் இல்லை.''

''சரி, மூன்று திங்களாக, 'அவன் வந்துவிடுவான் அவன் வந்துவிடுவான்' என்றிருந்த நீங்கள், இப்போதும் அப்படி இருக்காமல், இப்பொழுது என்னிடம் ஏன் வந்தீர்கள்?''

''இனிமேல் அவன் வருவான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அதனால்தான் உங்களிடம் இப்படி வந்திருக்கிறேன்.''

''ஓகோ, சரி! இதற்கு ஏன் இவ்வளவு பரபரப்பு? எப்பொழுது வேண்டுமானாலும் வந்து சொல்லி இருக்கலாமே! இப்படி இந்த விடியற்காலையில் வரவேண்டிய தேவை என்ன?''

''நேற்றிரவுதான் நான் வருவான் என்ற நம்பிக்கையை இழந்தேன். எனக்கு நேற்றிரவு முழுவதும் தூக்கம் இல்லை. எப்பொழுது விடியும் என்று படுக்கையிலேயே கிடந்தேன். விடிந்ததும் படுக்கையில் இருந்து எழுந்தபடியே இங்கே வந்திருக்கிறேன்.''

''சரி. புறப்படுங்கள். எப்படியாவது உங்கள் மகனை உங்களிடம் சேர்ப்பிக்கிறேன். உங்கள் மகனை, உங்கள் இடம் கொண்டுவந்து சேர்த்தால், நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்?'' என்று தன்னிடத்தை விட்டு எழுந்து நின்று கொண்டே கேட்டார் சங்கர்லால்.

''நீங்கள் என்ன கேட்டாலும் உடனே தருகிறேன் சங்கர்லால்'' என்றார் நாகநாதன்.

''சரி, வாருங்கள் கிளம்புவோம்'' என்று அங்கிருந்து கிளம்பினார் சங்கர்லால்.

''எங்கே?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்து நின்றார் நாகநாதன்.

''எங்கேயா? உங்கள் பங்களாவிற்குத் தான்'' என்றார் சங்கர்லால்.

''என் பங்களாவிற்கா? எதற்கு?'' என்று கேட்டார் நாகநாதன்.

''உங்கள் பங்களாவிற்குப் போய்க் கொஞ்ச நேரம் ஆராய்ச்சி செய்தால்தான் பையனைக் கண்டுபிடிக்க முடியும்'' என்றார் சங்கர்லால்.

நாகநாதன், ''சரி வாருங்கள் போகலாம்'' என்றார்

உடனே இருவரும் கீழே இறங்கிப் போய் வாயிலில் நின்றார்கள்.

சங்கர்லால் வந்து நிற்பதைக் கண்டதும் கார் ஓட்டி ஓடிப் போய்க் காரை எடுத்துக்கொண்டு வந்தான்.

கார் வந்து நின்றதும் இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். நாகநாதன் சொன்ன இடத்திற்குக் கார் கிளம்பியது.

நாகநாதன் வந்த கார், சங்கர்லால் காருக்குப் பின்னாலேயே சென்றது.

கொஞ்ச நேரத்திற்குள் கார், நாகநாதன் பங்களாவிற்குள் போய் நின்றது.

கார் நின்றதும் இருவரும் இறங்கினார்கள். நாகநாதன் வழியைக் காட்டிக்கொண்டே உள்ளே போனார்.

அவர் பின்னாலேயே நடந்து போய்க் கொண்டிருந்த சங்கர்லால், ''அந்தப் பையன் காணாமற்போன அன்று படுத்திருந்த கட்டிலையும், அந்த அறையையும் நான் பார்க்கவேண்டும்'' என்றார்.

"மேலே போகலாம் வாருங்கள்" என்று சங்கர்லாலை மேலே அழைத்துக் கொண்டு போனார் நாகநாதன்.

மேலே மாடியில், முதல் அறையைத் தாண்டி, இரண்டாவது அறையைத் தாண்டி, மூன்றாவது அறைக்குப் போனதும் நின்று அந்த அறைக் கதவுகளைத் திறந்து, "இதுதான் அவன் காணாமற்போன அன்றிரவு படுத்திருந்த அறை" என்றார் நாகநாதன்.

சங்கர்லால் அந்த அறைக்குள் நுழைந்தார். அவர் பின்னாலேயே நாகநாதனும் நுழைந்தார். அப்பொழுது-

"மியாவ்... மியாவ்."

பூனை ஒன்று கத்தும் ஓசைக் கேட்டது.

ஓசை வந்த திக்கில் திரும்பிப் பார்த்தார் சங்கர்லால். அங்கே...

கட்டிலில் ஒரு கருப்புப் பூனை உட்கார்ந்து திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தது.

சங்கர்லால், மெல்ல அந்தப் பூனைக்கு அருகில் போய் அதைத் தூக்கி, அன்போடு தடவிக் கொடுத்தார். பிறகு அதை அப்படியே தரையில் விட்டார்.

அந்தப் பூனை, விரைந்து ஓடி அந்த கட்டிலின் மேலேயே மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டது!

தரையில் விட்ட பூனை, கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டதைப் பார்த்த சங்கர்லாலுக்கு மிக வியப்பாக இருந்தது.

சங்கர்லால் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தப் பூனையை, மறுபடியும் எடுத்துத் தரையில் விட்டார். அந்தப் பூனை விரைந்து ஓடி அந்தக் கட்டிலின் மேலேயே மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டது!

சங்கர்லால், மெல்ல சிரித்துக் கொண்டே தன் கவனத்தைத் திருப்பினார்.

"இந்த அறையில் ஒரு கட்டில் தானே இருக்கிறது? உங்கள் கட்டில் எங்கே?" என்று கேட்டார் சங்கர்லால்.

"என் கட்டிலை அடுத்த அறைக்கு மாற்றிக்கொண்டு விட்டேன்" என்றார் நாகநாதன்.

"ஏன்? உங்கள் கட்டிலை எப்பொழுது அடுத்த அறைக்கு மாற்றினீர்கள்?"

"அவன் ஓடிப்போன மறுநாள் இரவு. நான் இங்கே தான் படுத்துக்கொண்டிருந்தேன். இரண்டு மணி வரைக்கும் தூக்கம் வரவில்லை. அப்பொழுது பணியாளனைக் கூப்பிட்டு என் கட்டிலை அடுத்த அறைக்கு மாற்றிப் போட்டுவிடச் சொன்னேன்."

"இந்தப் பூனை உட்கார்ந்திருக்கிறதே, இதுதான் பையன் படுத்திருந்த கட்டிலா?"

"ஆமாம்!"

"காணாமற்போன அன்றைக்கு இந்தக் கட்டிலில் தான் அவன் படுத்திருந்தானா?"

"சரி உங்கள் அறையைப் பார்க்கலாமா?" என்றார் சங்கர்லால்.

"ஓ, நன்றாய்ப் பார்க்கலாமே!" என்று சங்கர்லாலைத் தன் அறைக்கு மெல்ல அழைத்துக் கொண்டு போனார் நாகநாதன்.

சங்கர்லால் நாகநாதனின் படுக்கை அறையைச் சுற்றிலும் பார்த்துவிட்டு, "சரி, கீழே போய் வீட்டை ஒரு முறை அப்படியே சுற்றிப் பார்க்கலாம் வாருங்கள்" என்றார் சங்கர்லால்.

இருவரும் கீழே இறங்கிப் போனார்கள். நாகநாதன் வீடு முழுவதையும் சங்கர்லாலுக்குச் சுற்றிக் காட்டிக் கொண்டே வந்தார்.

சங்கர்லால், ஒவ்வொரு மூலை முடுக்கையும் நன்றாக ஊன்றிக் கவனித்துக் கொண்டே வந்தார்! அப்பொழுது

அதே கறுப்புப் பூனை, ஒரு மூலையில் உட்கார்ந்து, தன் முன்காலைத் தூக்கித் தரையில் அடித்துக் கொண்டிருந்தது.

சங்கர்லால், அந்தப் பூனையை உற்றுக் கவனித்தார். அந்தப் பூனையின் உடலில் அங்கங்கே கறுப்பு நிறம் பரவிக் கிடந்தது. அந்தப் பூனையின் கண்கள் தீயினாலான பிழம்பு மாதிரி ஒளி வீசின!

அந்தப் பூனை கொஞ்ச நேரம் சும்மாயிருந்தது. சங்கர்லால், மெல்ல அந்தப் பூனையின் அருகில் போய் அதைத் தூக்கித் தடவிக் கொடுத்தார். அந்தப் பூனையைத் தன் கைகளில் தூக்கிக்கொண்டே நாகநாதன் பின்னால் போனார்.

அந்தப் பூனை, "மியாவ் மியாவ்" என்று கத்தியது.

சங்கர்லால், அதை மெல்ல கீழே விட்டார். கீழே விட்டதும் அந்தப் பூனை அந்த இடத்திற்கே- அந்த மூலைக்கே- பழைய அந்த இடத்திற்கே போய் உட்கார்ந்து கொண்டு, முன்காலைத் தூக்கி, டப்டப் என்று தரையில் அடித்து, 'மியாவ் மியாவ்' என்று கத்தியது.

சங்கர்லால், அதைக் கவனிக்காதது போல நாகநாதன் பின்னால் போய்க் கொண்டே இருந்தார்.

நாகநாதன் வீடு முழுவதையும் சங்கர்லாலுக்குச் சுற்றிக் காண்பித்தார். சங்கர்லால் வீடு முழுவதையும் பார்த்துவிட்டு, ''இங்கே இந்தப் பங்களாவில் எனக்கு ஒன்றும் தெரியவில்லை நாகநாதன். பையன் எங்கோ ஓடி விட்டான். தேடிப் பார்த்துத்தான் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு ஏற்பாடுகள் ஏதாவது செய்வோம். நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டார் சங்கர்லால்.

''என்னவோ சங்கர்லால் நீங்கள் தான் என் பையனைக் கண்டு பிடித்துக் கொடுக்கவேண்டும்'' என்றார் நாகநாதன் காரின் கதவைப் பிடித்துக் கொண்டே. அவர் தொண்டை தழுதழுத்தது. அவர் கண்களில் நீர் நிறைந்தது.

''அதற்கென்ன, எப்படியும் கண்டுபிடித்துவிடலாம். நீங்கள் துன்பமின்றி இருங்கள்'' என்று சொல்லிவிட்டுக் காரோட்டியைப் பார்த்து, ''வீட்டுக்கு விடப்பா'' என்றார் சங்கர்லால்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு-

நாகநாதன் பங்களாவிற்குள் இரண்டு கார்கள் நுழைந்து நின்றன. அவைகளில் ஒன்று அட்சன். அது சங்கர்லாலின் கார், மற்றொன்று போலீஸ் கார்!

அட்சன் காருக்குள்ளிருந்து உதவிக் கமிஷனர் வகாபும், சங்கர்லாலும் இறங்கினார்கள். போலீஸ் காரில் இருந்து பத்துப்

பன்னிரண்டு கான்ஸ்டபிள்களும் இரண்டு பணியாட்களும் இறங்கினார்கள்.

எல்லாரும் பங்களாவிற்குள்ளே போனார்கள்.

அப்பொழுது, நாகநாதன் மாடியிலிருந்து இறங்கி வந்தார். வந்தவர், அப்படியே ஒரு படியில் நின்று விட்டார். அவர் கண்கள் விரிந்தன. முகம் சுருங்கியது. கீழே-

சங்கர்லால் நின்றுகொண்டிருந்தார்! அவருக்கு அடுத்தாற் போல், வகாப் நின்றுகொண்டிருந்தார்!

இவர்கள் இருவருக்கும் பின்னால் கான்ஸ்டபிள்கள் நின்று கொண்டிருந்தார்கள். இறுதியில்-

இரண்டுபேர், கையில் கடப்பாரைகளுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

நாகநாதன் அசையாமல், ஆடாமல், அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்!

நாகநாதனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஒரு நிமிடம்-

நாகநாதன், தாவி மேலே ஓடி, மின்னல் வேகத்தில் மறைந்துவிட்டார்!

இடையில் இருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நாகநாதனைச் சுடுவதற்காக மேலே தாவி ஓடினார் வகாப். பின்னாலேயே கான்ஸ்டபிள்கள் அத்தனை பேரும் தடதடவென்று ஓடினார்கள். அங்கே-

கடப்பாரைகள் வைத்திருக்கும் அந்த இருவர் மட்டும் அசையாமல் நின்றுகொண்டிருந்தார்கள். அங்கே சங்கர்லாலைக் காணோம்!

மூன்றாவது நிமிடம்-

நாகநாதன் மாடியிலிருந்து தோட்டத்தில் இருக்கும் குளத்தில் குதித்தார். அப்போது-

மறைந்திருந்த சங்கர்லால், பின்னாலிருந்து தாவி, அவர் குளத்திற்குள் விழுவதற்கு முன், பிடித்துக் கொண்டார். அப்போது-

வகாபும் கான்ஸ்டபிள்களும் மாடியில் ஏறி வந்து நின்றார்கள்.

நாகநாதன், சங்கர்லாலின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக முண்டினார்.

வகாப், வானத்தை நோக்கிச் சுட்டார்.

நாகநாதன், திமிறாமல் அப்படியே நின்றுவிட்டார்! வகாப், நீட்டிய துப்பாக்கியுடன் மாடியில் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

கொஞ்ச நேரத்தில் மாடியிலிருந்து இறங்கி ஓடிவந்த கான்ஸ்டபிள்கள், நாகநாதனைப் பிடித்துக் கொண்டார்கள். சங்கர்லால் நாகநாதனை விட்டுவிட்டுக் கைகுட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, "உள்ளே கொண்டு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்து சென்றார்.

கான்ஸ்டபிள்கள் நாகநாதனைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

வகாப், மாடியிலிருந்து வந்து கொண்டிருக்கும் பொழுதே தன் பக்கவாட்டுப் பையிலிருந்த விலங்கைக் கையிலெடுத்துக் கொண்டு வந்தார். வந்ததும் கான்ஸ்டபிள்கள் பிடித்து கொண்டிருந்த நாகநாதன் கைகளில் விலங்கை மாட்டிப் பூட்டி விட்டுச் சங்கர்லால் பக்கம் திரும்பி, "சங்கர்லால், நீங்கள் சொன்னபடி இவரை கைது செய்தாகிவிட்டது.இவரை எதற்காக கைது செய்யச் சொன்னீர்கள் என்று புரியவில்லையே! இந்த இருவரையும் கடப்பாரைகளோடு எதற்காக அழைத்துக்கொண்டு வரச் சொன்னீர்கள் என்றும் தெரியவில்லையே!" என்றார்.

"எல்லாவற்றையும் நன்றாகத் தெரிய வைக்கிறேன், வாருங்கள்" என்று சொல்லிவிட்டு நடந்தார் சங்கர்லால். வகாப், சங்கர்லாலுக்குப் பின்னாலேயே நடந்து போனார். மற்ற கான்ஸ்டபிள்கள் நாகநாதனைப் பிடித்துக் கொண்டு போனார்கள். கடப்பாரைகளை கையில் வைத்துக் கொண்டிருந்த இருவரும் இறுதியாகப் போனார்கள்.

கறுப்புப் பூனை ஒன்று மூலையில் உட்கார்ந்து கொண்டு தன் முன் காலைத் தூக்கி, டப் டப்பென்று அடித்துக் கொண்டிருந்தது அல்லவா-

அந்த இடத்திற்கு வந்து நின்றார் சங்கர்லால்.

எல்லாரும் நின்றார்கள்.

சங்கர்லால் கையைத் தட்டி இறுதியில் கடப்பாரையும் கையுமாக நின்றுகொண்டிருந்த அந்த இருவரையும் கூப்பிட்டார். அவர்கள் இருவரும் கடப்பாரைகளுடன் சங்கர்லால் எதிரே வந்து நின்றார்கள்.

சங்கர்லால், அந்தப் பூனை, தன் கால்களால் டப் டப் என்று அடித்த இடத்தைச் சுட்டிக்காட்டி, ''அந்த இடத்தை அரை ஆள்மட்டத்திற்குத் தோண்டுங்கள்'' என்று கூறினார்.

உடனே இருவரும் தோண்டத் தொடங்கினார்கள். சுற்றியிருந்தவர்கள் அத்தனை பேரும் தோண்டப்படும் அந்த இடத்திலே என்ன தோன்றப்போகிறதோ என்று ஆவலோடு அப்படியே கண்களைத் திருப்பாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், சங்கர்லால் மட்டும் நாகநாதன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த முகத்தில் கருமையும் இருளும் அச்சமும் கௌவிக் கொண்டிருந்தன. கண்களிலிருந்து கண்ணீர்-

கொஞ்ச நேரத்திற்குள் அரை ஆள் மட்டத்திற்குத் தோண்டிவிட்ட அந்த இருவரும் எதையோ பார்த்து அலறி மேலே ஏறிவிட்டார்கள்!

சங்கர்லாலும் வகாபும் முன்னால் நகர்ந்து போய் அந்தக் குழிக்குள் எட்டிப் பார்த்தார்கள். உள்ளே -

மண்டை ஓடும் எலும்புகளும் கிடந்தன!

வகாப் ஓரடி பின் வாங்கினார்!

சங்கர்லால் சிரித்துக்கொண்டே அந்த இருவரின் கைகளையும் பிடித்திழுத்து, "ஒன்றுமில்லை! வெறும் காய்ந்த மண்டை ஓடும் எலும்புகளும்தான் இருக்கின்றன. அவை

உங்களை ஒன்றும் செய்யா. அச்சம் கொள்ளாதீர்கள். அவைகளை எடுத்து வெளியே போடுங்கள்" என்றார்.

"இல்லை ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். இந்த மாதிரி மண்டை ஓட்டையும் எலும்புகளையும் தொட்டு எங்களுக்குப் பழக்கமில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான் அவர்களில் ஒருவன்.

சங்கர்லால், சிரித்துக் கொண்டே அந்தக் குழிக்குள் இறங்கப் போனார். அப்போது-

"சங்கர்லால், இருங்கள். நீங்கள் இறங்காதீர்கள். நான் கான்ஸ்டபிள்களை விட்டு எடுக்கச் சொல்லுகிறேன்" என்றார் உதவிக் கமிஷனர் வகாப்.

"என்ன வகாப் வலிமை இருப்பவர்கள் நான் எடுத்துப் போடுகிறேன் என்று வந்திருக்க மாட்டார்களா? அதனால் என்ன, நானே எடுத்துப் போடுகிறேன்" என்று சங்கர்லால் குழிக்குள் இறங்கி, அங்கே மண்டை ஓட்டின் மேலும் அந்த எலும்புகளின் மேலும் கிடந்த மண்ணை ஒதுக்கிவிட்டு அங்கே கிடந்த மண்டை ஓட்டையும் அத்தனை எலும்புகளையும் எடுத்து வெளியே போட்டார். அனைவரும் அருவருப்புடன் சற்று ஒதுங்கிக் கொண்டார்கள். வகாப் மட்டும் காலில் ஷூ இருக்கும் காரணத்தால் முன்வந்து, சங்கர்லால் வெளியே வரத் தன் கையைக் கொடுத்தார்.

சங்கர்லால், நீட்டப்பட்ட வகாபின் கரத்தைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினார். மேலே வந்ததும் தன் கரத்தில் இருந்த மண்ணைத் தட்டிவிட்டுக் கொண்டே, வகாபைப் பார்த்து, "இதோ, இங்கே கிடக்கின்ற மண்டை ஓடும் எலும்புகளும் தாம் நம் மதிப்பிற்குரிய திரு. நாகநாதன் அவர்களுடைய செல்வ மகன்!" என்றார்.

அதைக் கேட்டதும் அங்கிருந்த அனைவருடைய கண்களும் அகல விரிந்தன! மின்னல் போல் ஏற்பட்ட அந்தத் தாக்குதலைத் தாங்க முடியாமல் வகாபின் முகம், பல கோணங்களில் நெளிந்து சமாளித்துக் கொண்டது. வாயைத் திறந்து பேசமுடியாத அளவுக்கு அந்தத் தாக்குதல் அவர் வாயை மூடிவிட்டது!

சங்கர்லால், தன் பக்கவாட்டுப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து, கையிலிருந்த மண்ணைத் துடைத்துக்

கொண்டே வகாப்புக்குச் சற்றுப் பின்னால் நின்ற நாகநாதனுக்கு எதிரில் போய் நின்றார்!

நாகநாதன், குனிந்த தலையைத் தூக்காமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார். அவர் கண்களிலிருந்து கொட்டிய கண்ணீர், கன்னத்தில் வழிந்து, தரையில் சொட்டிக் கொண்டிருந்தது! சங்கர்லால், அவர் கீழ்த் தாடையைப் பிடித்து மேலே தூக்கி முகத்தை நிமிர்த்தினார். இருளும் அச்சமும் கலந்துக் கிடந்த அந்த முகத்தில் துன்பம் திரையிட்டது. பாசத்தின் நிழல் பரவியது.

சங்கர்லால் சிரித்துக்கொண்டே நாகநாதனைப் பார்த்து, "நாகநாதன், உங்கள் பையனை நான் எந்த விதத்திலும் தேடிக் கண்டுபிடித்து உங்களிடம் ஒப்புவித்துவிடுவதாக வாக்களித்திருந் தேன். அதே மாதிரி ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின், உங்கள் பையனைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்புவித்துவிட்டேன். ஆனால், மண்டை ஓடும் எலும்புகளுமாக இருக்கின்றனவே என்று வருத்தப்படாதீர்கள்; உங்கள் மகனை உங்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன் என்று சொன்னேனே தவிர உயிரோடு என்று நான் சொல்லவில்லை!" என்றார்.

நாகநாதன் உதடுகள் துடித்தன. அவர் ஏதோ சொல்ல முயற்சி செய்தார். மேற்கொண்டு முடியவில்லை என்பது அந்தத் துடிப்பில் தெரிந்தது.

சங்கர்லால், அவர் முதுகில் தட்டுக்கொடுத்தார் ஆறுதலுக்காக. ஆறுதலான அந்தச் செயல் ஆழத்தில் இருந்த அவர் துன்பத்தை மிகுதியாகக் கிளப்பிவிட்டது. நாகநாதன் அப்படியே சங்கர்லாலின் தோளில் சாய்ந்துக் கேவிக் கேவி அழுதார். குலுங்கிக் குலுங்கி அழுதார்.

சங்கர்லால் பக்கத்தில் இருந்த கான்ஸ்டபிளைப் பார்த்து, "அச்சமின்றி இந்த மண்டை ஓட்டையும், எலும்புகளையும் மூட்டைக் கட்டி எடுத்துக்கொண்டுபோய் டாக்டரிடம் கொடுத்துச் சோதிக்கச் சொல்லுங்கள். நான் எனக்கு வேண்டிய விவரங்களைத் தொலைபேசியில் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" என்றார்.

சங்கர்லால் தொட்ட எலும்புகளையும், மண்டை ஓட்டையும் துணிவாகத் தொடலாம் என்று தெளிந்த

கான்ஸ்டபிள்கள், அச்சமின்றி அந்த மண்டை ஓட்டையும் எலும்புகளையும் ஒரு சாக்கில் போட்டுக் கட்டி டாக்டரிடம் எடுத்துச் சென்றார்கள்.

அவர்கள் போனபின்பு, சங்கர்லால் கடப்பாரையுடன் நின்று கொண்டிருந்த அந்த இருவரையும் பார்த்து, "குழியை மூடி முன்பிருந்ததுபோல் செய்துவிடுங்கள்" என்று சொன்னார்.

உடனே அந்த இருவரும் குவிந்து கிடந்த மண்ணை கிடுகிடுவென்று குழிக்குள் தள்ளினார்கள்.

சங்கர்லால் வகாபைப் பார்த்து, "வகாப் என்கூட வாருங்கள்" என்று சொல்லிவிட்டு முன்னால் விரைந்து நடந்தார்.

வகாபும், மற்ற கான்ஸ்டபிள்களும், பின்னாலேயே நடந்தார்கள். நாகநாதனைப் பிடித்திருந்த இரண்டு கான்ஸ்டபிள்களும், நாகநாதனோடு பின்னால் தொடர்ந்தார்கள். சங்கர்லால் வீட்டைத் தாண்டித் தோட்டத்துக்கு வந்தார். வழியில் வாயிலில் நின்ற காவற்காரன் சங்கர்லாலை முறைத்துப் பார்த்தான். தன் ஐயாவைக் கைது செய்வதற்குக் காரணமாய் இருந்தவர் இவர்தானே என்று அவனுக்கு வருத்தம்! சிரித்துக்கொண்டே மேலே நடந்தார் சங்கர்லால்! பின்னாலேயே வகாபும், மற்ற கான்ஸ்டபிள்களும் காவற்காரனைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். இறுதியாக விலங்கிடப்பட்ட நாகநாதனும், இரண்டு பக்கத்தில், இரண்டு கான்ஸ்டபிள்களும் வந்தார்கள். கைது செய்யப்பட்ட தன் ஐயாவைப் பார்த்ததும் காவற்காரனின் கண்களில் நீர் நிறைந்தது. கண்ணீர் நிறைந்ததற்குக் காரணம், ஐயா மேல் அவன் கொண்ட பற்று, அல்லது இனி நமக்கு யார் கூலி தரப்போகிறார்கள் என்ற துன்பமா?

தோட்டத்தைத் தாண்டிய சங்கர்லால், குளத்துக்கு அருகில் வந்து நின்றார். எல்லோரும் அந்தக் குளத்துக்கு அருகில் வந்து நின்றார்கள்.

சங்கர்லால் நாகநாதனைப் பார்த்து, "நாகநாதன், இந்தக் குளத்துக்குள்ளே என்ன இருக்கிறது?" என்று கேட்டார் பொருள் நிறைவோடு.

இந்த வியப்புக்குரிய வினா வகாபுக்குச் சிரிப்பு மூட்டியது. 'இந்தக் குளத்துக்குள்ளே என்ன இருக்கிறதா? இது ஒரு வினாவா?